**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**DEPOSITION OF WITNESS**

**Sessions Case No.278/2018**

**Prosecution witness No. 6**

| | |
|---|---|
| **Name** | **: ரவி** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused present. Counsel present.)**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 27.01.2025.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:-

1) நான் வீரகனூர் 2வது வார்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அரசு தரப்பு சாட்சி தனராஜ் குடும்பத்தினரும், ஆஜர் எதிரிகளும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். தனுராஜ் குடும்பத்தினரும், ஆஜர் எதிரிகளின் குடும்பத்தினரும் சுமார் 5 வருடத்திற்கு பிரச்சணை ஏற்பட்டு அடிதடி ஆகிவிட்டதாக சொன்னார்கள். நான் சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து ஊருக்கு வந்தேன். அப்போது கும்பலாக இருந்தார்கள். அப்போது போலீசார் என்னிடத்தில் விசாரரித்து கையெழுத்து வாங்கிகொண்டார்கள்.

2) சம்பவத்தை நான் பார்க்கவில்லை. இந்த வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது.

சாட்சி பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

3) 18.12.2017ம் தேதி அன்று காலை சுமார் 10.30 மணியளவில் அங்குசாமி அவர் வீட்டின் முன்பு வெளியில் வந்தபோது தனராஜ் சாப்பிட்ட எச்சில் தண்ணீரை அங்குசாமி மீது ஊற்றினார் என்றும், அதற்கு கேட்ட போது தேவிடியா பையலே ஊற்றுவேன் என்றும், உன்னால் தான் தண்ணீர் பைப் போட முடியாமல் என்று சொல்லி இரும்பு பைப்பால் அங்குசாமி தலை மீது ஓங்கி அடித்தாகவும், அதனால் ரத்த காயம் ஏற்பட்டதாகவும், தனராஜ்யின் தம்பி மாசிமானனை உருட்டு கட்டையால் முதுகிலும், இடுப்பிலும், முழங்காலிலும் அடித்தாகவும், அங்கு இருந்த அங்கமுத்து மனைவி வரத்ம்மாளும், புளியங்குறிச்சியை சார்ந்தத சடையன் மகன் பழனிசாமி என்று தனராஜ் என்பவர் இந்த  தேவிடியா  பையலுக்கு இதே வேலையா போச்சு என்று திட்டி அங்குசாமியை எட்டி உதைத்து கையால் அடித்தாகவும், அப்போது தனராஜியின் அப்பா அங்கமுத்து  பையலை அடித்துக்கொள்ளுங்கள் என்றைக்கு இருந்தாலும் இவர் சாவு நம்ம கையால்தான் என்று சொல்லி அங்குசாமியின் முதுகில் அடித்தாகவும், தனராஜியின் தங்கை சிலம்பாரசி இந்த  தேவிடியா  பையலை உயிரோடு விடாதிங்க என்று செருப்பால் அங்குசாமியின் தலையிலும், கண்ணத்திலும் அடித்தாகவும், தனராஜ் அதே இரும்பு பைப்பால் இன்னையோட நீ காலிடா இதோடு ஒழிந்து போ என்று சொல்லி தலையிலும், இரண்டு முழங்கையிலும் அங்குசாமியை அடித்தாகவும், அவர்

அயா காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டு ஓடும் போது அங்குசாமியிக்கு ரத்தம் வருவதை பார்த்த அவர்கள் இந்த தேவிடியா பையலுக்கு செத்து போயிவிட்டான் ஓடி போய்விடலாம் என்று சொன்னதையும், அங்குசாமி சத்தம் போட்டதையும் நேரில் பார்த்து காப்பாற்றி 108 ஆம்புலென்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தாகவும், போலீசார் விசாரணையில் சாட்சியம் அளித்துவிட்டு எதிரிகள்ஒரே ஊர்காரார்கள் என்பதால் நான் அவர்களுக்கு ஆதரவாக சம்பத்தை பார்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Assistant Session Judge,**
**Attur.**